நாள் : 07.06.2024

<u>அசல் வழக்கு எண்: 132/2019</u>

**வா.சா.-1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனக்கு சொந்தமான சொத்தை அபகரித்து விட்டதாக கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் மொத்த பரப்பளவு 28 1/2 ஏர்ஸ் ஆகும் அதில் 26 ஏர்ஸ் எங்களுக்கு சொந்தமானது.

நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து சம்மந்தபட்ட ஆவணங்களில் தற்போது வரை எனது அப்பா மற்றும் பிரதிவாதியின் அப்பா பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் எனது பாட்டி அஞ்சுதம்மாள் பெயரில் வாங்கப்பட்டது . அந்த அசல் ஆவணம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள அவணங்களை நான் பார்க்கவில்லை.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் பார்த்தேன். பிரதிவாதி எதிர்வழக்குரையுடன் 15 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த ஆவணங்களில் உண்மை தன்மை இல்லை. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள என்னிடம் காட்டப்படும் வரிசை எண். 2 எனது பாட்டி பெயரிலுள்ள அசல் ஆவணம் என்றால் சரிதான்.

தாவா சொத்தை பொறுத்து எனது அப்பா 11.09.2018 ல் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார். எனது அப்பாவிற்கு 2 சகோதரிகள் இருந்தார்கள். எனது பாட்டிக்கு 3 பேர்கள் வாரிசுகள் ஆவார்கள்.

என்னுடைய 2 அத்தைகளையும் மேல்கரை மற்றும் நெம்மேலியில் திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் இல்லை. மேல்கரையில் திருமணம் செய்து வைத்த அம்சவள்ளி அம்மாளுக்கு வாரிசுகள் உள்ளார்கள்.

எனது பாட்டிக்கு சொந்தமான சொத்தை எனது அப்பா எனக்கு மட்டும் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுக்க முடியாது என்றாலும் மோசடியாக அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,

District Munsif

Mannargudi